**அக்டோபர் – 14**

# TNPSC துளிகள்

- சென்னை கொளத்தூரில் அமைக்கப்பட்டுள்ள ஆசியாவின் மிகப்பெரிய அலங்கார மீன் சந்தை வளாகத்தைத் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- பென்சில்வேனியா மற்றும் கனெக்டிகட் ஆகியவற்றிற்குப் பிறகு, கலிபோர்னியா மாகாணமானது தீபாவளியை மாகாண விடுமுறை தினமாக அறிவித்து அவ்வாறு அறிவித்த அமெரிக்காவின் மூன்றாவது மாகாணமாக மாறியுள்ளது.
- விரிவான உத்திசார் கூட்டாண்மை குறித்து உரை ஆற்றிய இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு நாடுகளின் பிரதமர்கள் உலகளாவிய அமைதி, உறுதித்தன்மை மற்றும் விதிகள் சார்ந்த சர்வதேச ஒழுங்கிற்கான பொதுவான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினர்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் RUCO முன்னெடுப்பு




- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையத்தின் (FSSAI) பயன்படுத்தப் பட்ட சமையல் எண்ணெய்யின் (RUCO) மறுபயன்பாட்டு முன்னெடுப்பு ஆனது பயன்படுத்தப்பட்ட எண்ணெயினை உயிரி எரிபொருளாக மாற்றுவதை ஊக்குவிக்கிறது.
- திருச்சிராப்பள்ளியில் உள்ள kB எரிசக்தி நிறுவனம் ஆனது தீபாவளிக்கு முன்னதாக ஏழு மாவட்டங்களில் உள்ள 2,000க்கும் மேற்பட்ட அலகுகளில் இருந்து சுமார் 30 டன் அளவிலான பயன்படுத்தப்பட்ட எண்ணெய்யை சேகரித்து சேமித்து வைத்துள்ளது.
- FSSAI விதிமுறைகள் ஆனது, பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய்யில் 20 முதல் 25 சதவீதம் வரையில் மீண்டும் பயன்படுத்த அனுமதிக்கின்றன, மேலும் இந்தியாவில் உள்ள 64 உயிரி எரிபொருள் ஆலைகளில் தமிழ்நாட்டில் மூன்று உயிரி எரிபொருள் ஆலைகள் உள்ளன.
- இவ்வாறு சேகரிக்கப்பட்ட இந்த எண்ணெயானது திருவானைக்காவலில் சுத்திகரிக்கப்

பட்டு, சேமிக்கப் பட்டு அங்கீகரிக்கப்பட்ட உயிரி எரிபொருள் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப் படுகிறது.

## 'விடியல் பயணம்' திட்டத்தின் விரிவாக்கம்

- தமிழ்நாடு அரசானது, 2025–26 ஆம் ஆண்டு முதல் மலைப் பகுதிகளில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கும் 'விடியல் பயணம்' இலவசப் பேருந்துப் பயணத் திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளது.
- இதற்கு தகுதி பெறுவதற்குப் பயனாளிகள், 2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட 21 வகைகளின் கீழ் 40 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவிலான குறைபாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- சுமார் 1,100 மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களின் துணையாளர்கள் முழுமையாகவும் பகுதியளவு மலைக்கடவுப் பாதைகளிலும் வெள்ளைப் பலகை கொண்ட பேருந்துகளில் பயணிக்கலாம்.
- இந்தத் திட்டமானது, சேவை வழங்கப்படும் பகுதிகளில் 35 கி.மீ வரையிலும், மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களால் இயக்கப்படும் சேவை வழங்கப்படாத பகுதிகளில் 40 கி.மீ வரையிலும் பயணிக்க அனுமதிக்கிறது.
- இந்த விரிவாக்கத்தினைச் செயல்படுத்துவதற்கு மாற்றுத் திறனாளிகள் நலத்துறை 88.65 லட்சம் ரூபாய் மானியத்தை அனுமதித்துள்ளது.




## மாநில நிதி ஆணையத் தலைவருக்கான ஊதியம்




- தமிழ்நாடு அரசானது, மாநில நிதி ஆணையத் தலைவரின் மாதாந்திர ஊதியத்தினை

6,500 ரூபாயிலிருந்து 2.25 லட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளது.

- ஏழாவது மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்ட நான்கு மாதங்களுக்குப் பிறகு இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்தத் திருத்தமானது, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில நிதி ஆணையத் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்கள் (பணி நிபந்தனைகள்) விதிகளில் மேற்கொள்ளப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## மாவட்ட நீதிபதி நியமனம் குறித்து உச்ச நீதிமன்றம்

- வழக்கறிஞர் மன்றப் பணியிலும் நீதித் துறை சேவையிலும் ஏழு ஆண்டுகள் ஒருங்கிணைந்த அனுபவம் கொண்ட நீதித்துறை அதிகாரிகளை மாவட்ட நீதிபதிகளாக நியமிக்க முடியும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- இந்த முடிவுக்கு இந்திய அரசியலமைப்பின் 233வது சரத்தினை அரசியலமைப்பு அமர்வு சுட்டிக் காட்டியது.
- முன்னதாக, ஏழு ஆண்டுகள் அனுபவம் கொண்ட பயிற்சி பெற்ற வழக்கறிஞர்கள் மட்டுமே மாவட்ட நீதிபதிகளாக நேரடி ஆட்சேர்ப்புக்கு தகுதியுடையவர்களாக இருந்தனர்.
- வழக்கறிஞர்கள் நீதித்துறை பணியில் சேர்ந்தவுடன் தங்கள் வழக்கறிஞர் அந்தஸ்தை இழக்க மாட்டார்கள் என்று நீதிமன்றம் கூறியது.
- மாவட்ட நீதிபதி அல்லது கூடுதல் மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கான குறைந்த பட்ச வயது 35 வயது ஆகும்.
- இந்தத் தீர்ப்பை செயல்படுத்துவதற்கு வேண்டி மாநில அரசுகள் ஆனது உயர் நீதிமன்றங்களுடன் கலந்தாலோசித்து மூன்று மாதங்களுக்குள் விதிகளைத் திருத்த வேண்டும்.





## பசுமை ஹைட்ரஜன் மையங்கள்

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது, மூன்று முக்கிய இந்தியத் துறைமுகங்களை பசுமை ஹைட்ரஜன் மையங்களாக அங்கீகரித்துள்ளது.
- குஜராத்தில் உள்ள தீன்தயாள் துறைமுகம், தமிழ்நாட்டில் உள்ள வ.உ.சிதம்பரனார் துறைமுகம் மற்றும் ஒடிசாவில் உள்ள பாரதீப் துறைமுகம் ஆகியவை இதற்காக

தேர்ந்தெடுக்கப்பட்டன.


- இந்த அங்கீகாரமானது தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தத் திட்டமானது, இந்தியாவில் ஒருங்கிணைந்த ஹைட்ரஜன் சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2070 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் தூய்மையான ஆற்றலுக்கான மாற்றத்தை முன்னேற்றுவதும் நிகர சுழி உமிழ்வு நிலையை அடைவதும் இதன் இலக்காகும்.
- இந்தத் திட்டமானது, பசுமை ஹைட்ரஜன் மற்றும் அதன் விளை பொருட்களின் பெரிய அளவிலான உற்பத்தி, பயன்பாடு மற்றும் ஏற்றுமதியை ஊக்குவிக்கிறது.




## AgriEnIcs திட்டம்

- மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் (MeitY) ஆனது வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் தகவல் மற்றும் தொடர்பு அமைப்புகள் (AgriEnIcs) திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் துறைகளுக்கான மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பயன்பாடு, செயல் விளக்கம் மற்றும் வணிகமயமாக்கல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- கொல்கத்தாவில் உள்ள மேம்பட்ட கணினி மேம்பாட்டு மையம் (C-DAC) ஆனது அதன் முதன்மை நிறுவனமாக இந்தத் திட்டத்தினை செயல்படுத்துகிறது.
- இதில் பங்கேற்கும் நிறுவனங்களில் கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் இந்தியா முழுவதும் உள்ள தொழில்துறை பங்குதார அமைப்புகள் அடங்கும்.
- மாற்றப்பட்ட அல்லது தொடங்கப்பட்ட ஐந்து தொழில்நுட்பங்களும் இந்த AgriEnIcs திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு சோதிக்கப் பட்டன.
- இந்த முன்னெடுப்பானது, விரிவுபடுத்தக் கூடிய, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட,

உணர்வுக் கருவி அடிப்படையிலான வேளாண் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை உருவாக்குவதன் மூலம் ஆத்மநிர்பர் பாரதத்தினை (தன்னிறைவு கொண்ட இந்தியா) ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சர்வதேசச் செய்திகள்

### உலகளாவிய நிதி சார் தொழில்நுட்ப விழா 2025




- 6வது உலகளாவிய நிதி சார் தொழில்நுட்ப விழாவானது (GFF) மும்பையில் நடத்தப் பட்டது.
- இந்த நிகழ்வின் மூலம் இந்தியாவும் ஐக்கியப் பேரரசும் உலகளாவிய நிதி நிலப் பரப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு கூட்டாண்மையை உருவாக்கின.
- இந்தியாவின் டிஜிட்டல் உள்கட்டமைப்புகள் ஒவ்வொரு மாதமும் 20 பில்லியன் பரிவர்த்தனைகளைச் செயலாக்குகின்றன.
- 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் நிதியளிப்பில் உலகளவில் முதல் மூன்று நிதி சார் தொழில்நுட்பச் சூழல் அமைப்புகளில் இந்தியா இடம்பிடித்தது.
- இந்திய செயற்கை நுண்ணறிவு திட்டமானது சமமான அணுகல், மக்கள்தொகை

அளவீடுகளுக்கான திறன் மேம்பாடு மற்றும் செயற்கை நுண்ணறிவின் (AI) பொறுப்பான பயன்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

## அருமண் உலோக ஏற்றுமதியில் சீனாவின் கட்டுப்பாடு

- தேசியப் பாதுகாப்பு சார்ந்த அச்சுறுத்தல்களைக் காரணம் காட்டி ஐந்து கூடுதல் அருமண் உலோகங்கள் மீதான புதிய ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை சீனா அறிவித்து உள்ளது.
- இதனால், ஏற்றுமதி தடை விதிக்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்தன.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் அருமண் உலோகங்களை சுத்திகரிக்கப் பயன்படுத்தப்படும் சிறப்புத் தொழில்நுட்ப உபகரணங்கள் மீதும் இந்த கட்டுப்பாடுகள் பொருந்தும்.
- மின்சார வாகனங்கள், குறைக்கடத்திகள் மற்றும் போர் விமானங்கள் மற்றும் எறிகணைகள் உள்ளிட்ட முக்கியமான அமெரிக்கப் பாதுகாப்பு அமைப்புகள் போன்ற தொழில்நுட்பங்களுக்கு அருமண் உலோகங்கள் மிக முக்கியமானவையாகும்.
- உலகளாவிய அருமண் உலோகச் செயலாக்கத்தில் சுமார் 90% ஆனது சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது.
- சீனாவின் அருமண் உலோகங்களை அதிகளவில் இறக்குமதி செய்யும் நாடாக அமெரிக்கா உள்ளதால், இந்த ஏற்றுமதி கட்டுப்பாடுகளால் அமெரிக்கா அதிகம் பாதிக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





## கோகோ தீவுகள் பிரச்சினை

- அந்தமான் மற்றும் நிக்கோபருக்கு அருகிலுள்ள கோகோ தீவுகளில் சீன நாட்டினர் யாரும் இல்லை என்று மியான்மர் இந்தியாவிடம் தெரிவித்தது.
- மியான்மரின் நேபிடாவில் நடைபெற்ற பாதுகாப்பு பேச்சுவார்த்தையின் போது இந்த அறிக்கை வெளியிடப் பட்டது.
- கோகோ தீவுகளுக்கு கடற்படை வருகை தருவதற்கான இந்தியாவின் கோரிக்கைக்கு மியான்மரிடமிருந்து எந்தப் பதிலும் வழங்கப் படவில்லை என்பதால் அது இன்னும் நிலுவையில் உள்ளது.
- செயற்கைக்கோள் படங்கள் 2,300 மீட்டர் விமான ஓடுபாதை மற்றும் புதிய இராணுவ

உள்கட்டமைப்பு மேம்பாட்டில் இருப்பதைக் காட்டுகின்றன.

- 1,500 பணியாளர்களுக்கான புதிய இராணுவ முகாம்கள் மற்றும் ஜெர்ரி தீவு சமிக்ஞை விரிவாக்க உள்கட்டமைப்பிற்கான ஒரு தரைவழி ஆகியவை இங்கு கட்டமைக்கப் படுகின்றன.
- அருகிலுள்ள இடங்களிலிருந்து, எறிகணை சோதனைகள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் செயல்பாடுகளை சீனா கண்காணிக்கக் கூடும் என்று இந்தியா சந்தேகிக்கிறது.
- மியான்மர் அங்கு சீனப் படைகளின் இருப்பை மறுத்தாலும், அது சீனாவுடன் தொடர்புடைய தீவிர கிளர்ச்சியாளர்களுடன் வடக்குப் பகுதிகளில் வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## முதல் தேஜாஸ் Mk1A போர் விமானம்

- இந்திய விமானப்படை (IAF) ஆனது அதன் முதல் இலகுரக போர் விமானமான தேஜாஸ் Mk1A எனும் (LCA) ஜெட் விமானத்தை விரைவில் பெற உள்ளது.
- 83 தேஜாஸ் Mk1A ஜெட் விமானங்களைத் தயாரிப்பதற்கு இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- IAF ஆனது அதன் அனுமதிக்கப்பட்ட 42 படைப் பிரிவுகளுக்கும் குறைவாக தற்போது 29 படைப் பிரிவுகளை இயக்குகிறது என்பதோடு மேலும் இந்த இடைவெளியைக் குறைப்பதற்காக ஆண்டுதோறும் சுமார் 30-40 விமானங்களைச் சேர்ப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- மற்றத் திட்டங்களில் 114 பல பயன்பாட்டுப் போர் விமானங்களை (MRFA) வாங்குவது

(உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரஃபேல் ஜெட் விமானங்கள்), மற்றும் மேம்பட்ட நடுத்தர போர் விமானங்களை (AMCA) உருவாக்குவது ஆகியவை அடங்கும்.




## உலகின் முதல் இரட்டை-கோபுர சூரிய-வெப்ப மின் உற்பத்தி ஆலை




- சீன நாடானது, கோபி பாலைவனத்தில் உலகின் முதல் இரட்டை-கோபுர சூரிய-வெப்ப மின் உற்பத்தி நிலையத்தை தொடங்கியுள்ளது.
- இது இரண்டு 200 மீட்டர் கோபுரங்களில் சூரிய ஒளியைக் குவிப்பதற்காக சூரிய திசை நோக்குக் கருவி/ஹீலியோஸ்டாட்கள் எனப்படும் 27,000 கண்ணாடிகளைப் பயன்படுத்துகிறது.
- இந்தக் கோபுரங்கள் சுழலி/டர்பைன்களை இயக்கும் நீராவியை உற்பத்தி செய்வதற்கு 570 டிகிரி செல்சியஸ் வரையிலான வெப்பத்தை உருவாக்குகின்றன.
- இந்த அமைப்பு ஆனது, சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு அல்லது மேகமூட்டமான

வானிலையிலும் கூட மின்சார உற்பத்தியை செயல்படுத்துகிறது.

- இரட்டை-கோபுர வடிவமைப்பு ஆனது ஒற்றை-கோபுர ஆலைகளுடன் ஒப்பிடும் போது அதன் செயல்திறனை சுமார் 25 சதவீதம் அதிகரிக்கிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## IUCN உலக வளங்காப்பு மாநாடு 2025




- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) 2025 ஆம் ஆண்டு உலகப் பாதுகாப்பு மாநாடு ஆனது ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகரமான அபுதாபியில் தொடங்கியது.
- பல்லுயிர்ப் பெருக்க இழப்பு, பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவை எதிர்த்துப் போராடுவதற்கான அவசர கால உலகளாவிய நடவடிக்கை குறித்து இந்த மாநாடு கவனம் செலுத்துகிறது.
- முக்கியத் தீர்மானங்களில் செயற்கை உயிரியல் கொள்கைகள், வணிக ரீதியான செல்லப் பிராணி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பாதுகாப்பிற்கான புதை படிவ எரிபொருள்களைப் படிப்படியாக நீக்குதல் ஆகியவை அடங்கும்.
- சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் குற்றங்களை எதிர்த்துப் போராடுவது குறித்த புதிய உலகளாவிய வழிகாட்டுதல்களும் இதில் முன் வைக்கப் பட்டன.
- 2030 ஆம் ஆண்டிற்குள் பல்லுயிர்ப்பெருக்கம் மற்றும் பருவநிலை இலக்குகளை அடைவதற்காக உலகளாவிய ஒத்துழைப்பை விரைவுபடுத்துவதை இந்த மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.


# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## 2024–25 ஆம் ஆண்டில் சிறு நிதிக் கடன் தவணை தவறுதல்

- சிறுநிதி நிறுவனங்களுக்கான (MFI) சுய-ஒழுங்குமுறை அமைப்பான Sa-Dhan, வருடாந்திர பாரத் சிறுநிதி அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2024–25 ஆம் நிதியாண்டிற்கான அறிக்கையானது, நாடு முழுவதும் சிறுநிதிக் கடன்

தவணை தவறுதல்களில் அதிக உயர்வைக் காட்டுகிறது.

- 30 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ள கடன்கள்/தொகுப்புகள் (PAR 30+) 2024–25 ஆம் நிதியாண்டில் 6.2% ஆக அதிகரித்துள்ளது என்ற நிலையில் இது 2023–24 ஆம் நிதி ஆண்டில் 2.1% ஆக இருந்தது.
- 90 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ள கடன்கள் வாராக் கடன்கள் (NPAs) என வகைப் படுத்தப் பட்டுள்ளன என்பதோடு கடந்த ஆண்டு 1.6% ஆக இருந்த இது தற்போது 4.8% ஆக உயர்ந்துள்ளது.
- பீகாரில் அதிகபட்சமாக 57,712 கோடி ரூபாய் சிறுநிதி கடன் நிலுவையில் உள்ளது.
- பீகாரில், 7.2% கடன்கள் 30 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ளன என்பதோடு மேலும் 4.6% கடன்கள் 90 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ளன.
- கிராமப்புறக் கடன் வாங்குபவர்கள் 2.3 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள கடன்களை பெற்றுள்ளனர் என்ற நிலையில் அதில் 6.4% கடன்கள் 30 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ளன.
- பகுதியளவு நகர்ப்புற (6.1%) மற்றும் நகர்ப்புற (6%) பகுதிகளில் நிலுவையில் உள்ள கடன் விகிதம் குறைவாக இருந்தது என்பதோடு இது கிராமப்புறங்களில் கடன் திருப்பிச் செலுத்துதலின் மீதான அதிக நெருக்கடியைக் காட்டுகிறது.
- இந்தத் தரவானது, குறிப்பாக கிராமப்புற இந்தியாவில், சிறுகடன்/நிதித் துறையில் அதிகரித்த கடன் ஆபத்து மற்றும் அதைத் திருப்பிச் செலுத்தும் நெருக்கடியைப் பிரதிபலிக்கிறது.




# மாநிலச் செய்திகள்

## சர்வதேச ஊதா விழா 2025

- 3வது சர்வதேச ஊதா திருவிழாவானது கோவாவில் தொடங்கப்பட்டது.
- இந்த நிகழ்வானது, உள்ளடக்கிய சமூகத்திற்கான பன்முகத் தன்மை மற்றும் அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகிறது.
- இந்த விழாவானது, மாற்றுத்திறனாளிகளின் திறமை மற்றும் ஆற்றலை வெளிப்படுத்தியதோடு, திறன் கொண்டுள்ள மற்றும் தொழில்முனைவோரை அங்கீகரிப்பதற்கான ஒரு இயலாமையை வரம்பாகக் கருதுவதிலிருந்து ஒரு மாற்றத்தை மேற்கொள்ள ஊக்குவித்தது.
- இந்த நிகழ்வை மாநில மாற்றுத்திறனாளிகள் ஆணையர், சமூக நல இயக்குநரகம்

மற்றும் மத்திய அரசின் மாற்றுத்திறனாளிகள் அதிகாரமளித்தல் துறை ஆகியவை ஏற்பாடு செய்தன.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசு 2025




- இது அதிகாரப்பூர்வமாக பொருளாதார அறிவியலுக்கான ஸ்வெரிஜஸ் ரிக்ஸ்பேங்க் பரிசு என்று அழைக்கப் படுகிறது.
- பொருளாதார அறிவியலுக்கான 2025 ஆம் ஆண்டின் நோபல் நினைவு பரிசு ஆனது ஜோயல் மோகிர், பிலிப் அகியோன் மற்றும் பீட்டர் ஹோவிட் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- "புதுமை சார்ந்த பொருளாதார வளர்ச்சியை விளக்கியதற்காக" இந்த மூவருக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- பரிசின் பாதி மதிப்பானது "தொழில்நுட்ப முன்னேற்றத்தின் மூலம் நீடித்த வளர்ச்சிக்கான முன் நிபந்தனைகளை அடையாளம் கண்டதற்காக" மோகிருக்கு வழங்கப்படும்.

- மற்றொரு பாதி "படைப்பாக்கத்தினால் ஏற்படும் அழிவின் மூலமான நீடித்த வளர்ச்சியின் கோட்பாட்டிற்காக" அகியோன் மற்றும் ஹோவிட்டிற்கு கூட்டாக வழங்கப்படுகிறது.

### கலைமாமணி விருதுகள் 2025




- சென்னையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஏற்பாடு செய்திருந்த விழாவில், 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கலை மற்றும் கலாச்சாரத் துறைகளில் 90 கலைஞர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கலைமாமணி விருதுகளை வழங்கினார்.
- கலைமாமணி விருது பெற்ற ஒவ்வொருவருக்கும் மூன்று பவுன் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் முதல்வரிடமிருந்து கௌரவச் சான்றிதழ் வழங்கப்பட்டது.
- பேராசிரியர் N. முருகேசப் பாண்டியன் தேசிய அளவில் 2025 ஆம் ஆண்டிற்கான பாரதியார் விருதினைப் பெற்றார்.
- பின்னணிப் பாடகருக்கு K. J. யேசுதாஸ் 2025 ஆம் ஆண்டிற்கான M. S. சுப்புலட்சுமி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- நாட்டுப்புறக் கலைஞர் முத்துக்கண்ணம்மாளுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான பால சரஸ்வதி விருது வழங்கப்பட்டது.

## முக்கிய தினங்கள்

### உலக வலசை போகும் பறவைகள் தினம் 2025 - அக்டோபர் 11

- இது ஆண்டிற்கு இரண்டு முறை மே 10 மற்றும் அக்டோபர் 11 ஆகிய தேதிகளில் கொண்டாடப் படுகிறது.
- மனித நடவடிக்கைகள் மற்றும் விரிவடையும் நகர்ப்புற மேம்பாடு காரணமாக வலசை போகும் பறவைகள் எதிர்கொள்ளும் பல சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.


- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Shared Spaces: Creating Bird-Friendly Cities and Communities" என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## புத்தரின் நினைவுச்சின்னங்களின் கண்காட்சி

- புத்த சாக்யமுனியின் நினைவுச் சின்னங்கள் முதன்முறையாக இந்தியாவிலிருந்து ரஷ்யாவின் கல்மிகியாவினை அடைந்தன.
- கபிலவஸ்து நினைவுச் சின்னங்கள் என்று அழைக்கப்படுகின்ற இந்த நினைவுச் சின்னங்கள் ஆனது புத்த மதத்தின் மிகவும் புனிதமான பொக்கிஷங்களில் ஒன்றாகும்.
- இந்த நினைவுச் சின்னங்கள் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 12 முதல் 18 ஆம் தேதி வரை கல்மிகியாவின் மத்திய குருலில் காட்சிப்படுத்தப்படுகின்றன.
- இந்தக் கண்காட்சியை இந்தியக் கலாச்சார அமைச்சகம் மற்றும் சர்வதேசப் பௌத்த கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.
- கல்மிகியாவின் தலைநகரான எலிஸ்டா என்பது ரஷ்யாவில் உள்ள ஒரு முக்கியமான ஆன்மீக மையமாகும்.




Casket of Holy Relics of **Lord Buddha**

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★